கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வள்ளியூர்

அ.வ.எண்.138/2024

| | | | |
|---|---|---|---|
| | வா.சா.1 | - | பொன்னுதாய் |
| நாள்.11.03.2026 | த/பெ | - | லட்சுமனன் |

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, 2, 3 பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1) என் பெயர் என்ன என்றால் பொன்னுதாய் ஆகும். இவ்வழக்கில் நான் வாதி ஆவேன் என்றால்சரிதான். நான் இவ்வழக்கில் முதல் விசாரணை வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான். மேற்படி முதல் விசாரணை வாக்குமூலத்தில் என்ன விவரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல எனக்கு ஓரளவு தெரியும். இவ்வழக்கின் 5ம் தபசில் சொத்து என்ன என்றால் எனக்கு சரியாக தெரியாது. பொதுப் பாதை சம்பந்தமாக வாதி மற்றும் 1பிரதிவாதி இடையே தாவா என்றால் சரிதான், ஆனால் அது பொதுப்பாதை அல்ல எங்கள் பாதை ஆகும். மேற்படிப்பாதையை தற்போது யார் யார் பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் நாங்கள் தான் பயன்படுத்தி வருகிறோம். மேற்படி பாதையின் சர்வே எண் என்ன என்றால் எனக்கு தெரியாது. மேற்படி பாதையின் நீளம் என்ன என்றால் நீளமும், அகலமும் தெரியாது, ஆனால் அது 10 செண்ட் நிலம் ஆகும். மேற்படி பாதைக்கு என தனிப்பட்டா உள்ளதா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.6 புலவரைபடத்தில் மேற்படி பாதை தனியாக காட்டப்பட்டுள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. 2024ம் வருடம் 1ம் பிரதிவாதி அவருடைய வாரிசுகளுக்கு செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்தி உள்ளார் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணத்தின் எண் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் செல்லத்தக்கதல்ல என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் எந்தவகையில் செல்லத்தக்கதல்ல என்றால் 73 வருடமாக அனுபவித்து வருகிறோம், எங்கள் பெயரில் ஆவணமும் உள்ளது. 1ம் பிரதிவாதி அவருடைய வாரிசுகளுக்கு ஏற்படுத்திய செட்டில்மெண்ட் ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன், அது வா.சா.ஆ.10 ஆகும்.

Digitally signed by MITHUNA A KAISER
MITHUNA A KAISER
Date: 2026.03.11 15:07:57 +0530

2) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்தில் பட்டா எண்.485 ன்படி 1ம் பிரதிவாதியின் கணவர் பால்ராஜ் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்து என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், அந்த சொத்து அவருக்குரியது தான், ஆனால் 5ம் தபசில் சொத்தையும் சேர்த்து பட்டா ஏற்படுத்தியுள்ளார்கள், பட்டா ஏற்படுத்தியதன் விளைவாக எங்களையும் சொத்தின் அனுபவத்தில் இருந்து வெளியேற்றி விட்டார்கள், எங்களுக்கு அதில் 10 ஏக்கர் நிலமும், பாதையும் உள்ளது. 1ம் பிரதிவாதியின் நிலத்திற்கு தெற்குபக்கம் என்ன உள்ளது என்றால் பிரதான பாதை உள்ளது. கிழக்கு பக்கம் எங்கள் சொத்து என்றால் சரிதான். மேற்படி வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஏற்படுத்தப்பட்ட விவரம் இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே தெரியும் என்றால் தெரியாது. நான் வழக்கு தாக்கல் செய்யும் சமயமே ஆ பரிகாரம் மேற்படி செட்டில்மெண்ட் ஆவணம் தொடர்பாக கோரியுள்ளேன், தற்போது வழக்கிற்காக பின்னர் தான் தெரியும் என பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்தின்படி 5ம் தபசில் சொத்து சம்மந்தமான ஆவணம் 1ம் பிரதிவாதியின் மக்களான சிவன்ராஜ், விஜயபாபு, லெபின் ஆகியோர் பெயரில் உள்ளது என்றால் சரியல்ல, மற்றொரு மகன் உண்டு, ஸ்ரீகிருஷ்ணபெருமாள் ஆகும், மொத்தம் நான்குபேர் ஆவார்கள். மேற்படி நான்கு பேர்களும் சேர்ந்து 1ம் பிரதிவாதி பெயருக்கு வா.சா.ஆ.10 செட்டில்மெண்ட் ஆவணத்தை பிறப்பித்து கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி ஏற்படுத்தி கொடுத்துள்ள நான்கு நபர்களும் இவ்வழக்கில் கட்சி சேர்க்கவில்லை என்றால் சரிதான் அவர்களுடைய தாயாரை கட்சி சேர்த்துள்ளேன். பட்டா எண்.485 தவறுதலாக ஏற்படுத்தப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2024 ஆண்டு தெரியும், தேதி, மாதம் ஞாபகம் இல்லை. எனக்கு வழக்கு தாக்கல் செய்யும் சமயமே மேற்படி விவரம் தெரியும் என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. மேற்படி பட்டாவை திருத்துவதற்காக நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால் நடவடிக்கை எடுத்துள்ளேன். நான் என்ன நடவடிக்கை எடுத்துள்ளேன் என்றால் எனது வழக்கறிஞருக்கு மட்டும் தான் தெரியும். நான் நடவடிக்கை எடுத்துள்ளதை காட்டும் விதமாக நீதிமன்றத்தில் ஆவணம் ஏதும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை, எனது வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.11 15:08:02 +0530

3) பொதுவாக சொத்தின் உரிமையை விசாரிப்பதற்கு சார்பதிவாளருக்கு அதிகாரம் இல்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பட்டாவின் அடிப்படையில் உரிமை உள்ளதாக 1ம் பிரதிவாதியின் வாரிசுகள் தாக்கல் செய்த ஆவணத்தை பதிவு செய்து கொடுக்கவேண்டியது இந்திய பதிவு சட்டத்தின்படி 2ம் பிரதிவாதியின் தார்மீக கடமை ஆகும் என்றாலும், 2ம் பிரதிவாதி பதிவு செய்த ஆவணத்தை குறித்து கேள்வி எழுப்ப இயலாது என்றாலும் சரியல்ல. நீதிமன்றத்தால் இவ்வழக்கில் பிறப்பிக்கப்படும் உத்தரவைபொறுத்து மட்டுமே முடிவுகள் எடுக்க இயலும் என்றால் சரியல்ல. இவ்வழக்கில் 2, 3 பிரதிவாதிகள் அவசியமற்ற தரப்பினர்கள் என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் கோரியுள்ள பரிகாரங்கள் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 2, 3 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதி தரப்பு குறுக்குவிசாரணை மற்றொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.)

MITHUNA A KAISER

Digitally signed by MITHUNA A KAISER
Date: 2026.03.11 15:08:05 +0530